RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s241

# “கணியான்” கூத்துக் கலையை மார்க்சியக் கோட்பாட்டோடு ஒப்பிடுதல்

**நா. வித்யா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அமெரிக்கன் கல்லூரி, (மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), மதுரை-625002, தமிழ்நாடு, இந்தியா

# Comparing Kaniyan Koothu (Dramatic Dance) art with Marxist Theory

**N. Vidhya [a, *]**

[a] Department of Tamil, The American College, (Affliated to Madurai Kamaraj University), Madurai- 625002, Tamil Nadu, India

* Corresponding Author: vidyasaravanan1988@gmail.com

Received: 13-08-2022
Revised: 05-10-2022
Accepted: 08-11-2022
Published: 15-12-2022

Check for updates

**ABSTRACT**

The Marxist type of materialism is a sociological study based on historical context. These include family, property, state, caste, religion, rituals, art, literature, classes, and social divisions. In a world of biodiversity, the environment in which humans live is extensive. Only men can speak of trades, religions, and castes. When it is accepted that history is for men, riots arise within religion itself. There are divisions, and some communities are oppressed. The oppressed tribes find God through KalaikKoothu and identify their races. Man-made art and literature operate with various techniques. Man is the one who creates the world according to himself. Divisions and rifts arose in society. Society gave way to ups and downs.

**Keywords:** Kaniyan Koothu, Marxist, Religions, Castes

## முன்னுரை

இந்தியச் சமூதாயத்தில் கடவுள் நம்பிக்கை என்பது ஒரு முக்கிய அம்சமாக இருந்து வந்திருக்கிறது. எல்லாவகையான ஆற்றல்களையும் நன்மைகளையும் பேரின்பத்தைத் தம்மிடம் தாங்கியவராகவும் கடவுளைப் பற்றிய கருத்துக் கொண்டவர்களாய் நாட்டார் தெய்வ வழிபாட்டில் நிகழ்த்தப்படும் பெரும்பாலான இந்தியர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மக்கள் தங்கள் வாழ்வின் தோல்விகள், துயரங்கள் நீங்க கடவுள் என்ற உயரிய நிலையை தம்முள் வயப்படுத்திக் கொள்ள விரும்புகின்றனர். அத்தகைய தெய்வீக நிலையை அடைவதற்கான தூண்டுதலாக இந்தியர்களின் கலை இலக்கியங்களின் பெரும் பகுதி இருந்து வந்தன இறையைத் தேட தொடங்கியவர்கள் இறைமையைத் தமக்குள்ளே உருவாக்கி கொள்ளத்தக்க முயற்சியிலேயே தங்களுக்கான விடுதலையை சாதித்துக் கொள்ள முயன்றனர்.

இந்திய வாழ்க்கையும் இந்திய சமயங்களும் தெய்வீகத்தை அடிப்படையாகக் கொண்டவை. மார்க்ஸியம் பொருள்முதல்வாத பண்பு உடைய ஆயிற்றே! இரண்டும் எவ்வகையில் ஒன்றாகும் என்பது ஒரு கேள்வி. இந்திய வாழ்க்கைக் கண்ணோட்டத்தில் ஒரு உன்னத நிலையாகத்தான் இந்திய சமயங்கள் உருவாகின. மனிதன் வாழ்க்கையை சமுதாயத்தின் மூலம் கொண்டு உறவினாலும் இயற்கையுடன் கொண்டுள்ள உறவினாலும் தன்னுடன் தானே கொண்டுள்ள உறவினாலுமே வாழ்கிறான். இம் மனித வாழ்க்கை தனது வரலாற்று அனுபவங்களுக்கேற்ப பலவகையான கருத்தோட்டங்கள், கலாச்சாரங்கள், கலை இலக்கியங்கள், சமயங்கள், தத்துவங்கள் முதலியவற்றை

உருவாக்கிக் கொண்டு அவற்றை வாழ்ந்து அதன் மூலம் தன்னை மேலும் சிறப்பாக உருவாக்கிக் கொள்கிறது.

சமுதாயத்தின் உறவில் இருந்து அறவே துண்டிக்கப்பட்ட தனிமனிதர்கள் சிந்தனை அளவில் சாதிக்க முயலும் முக்தி நிலையை செயல்வடிவில் சாதிக்க முயல்கிறது மார்க்சியம். இக்கருத்தோட்டத்தை ஒட்டி "கணியான் கூத்து" கலையை முன் வைத்து நிகழ்த்தப்படும் நாட்டார் தெய்வ வழிபாட்டை மார்க்ஸிய நோக்கில் ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

சமூகத்திலும் வரலாற்றிலும் "இயங்கும் பொருளை" மார்க்ஸ் காண முனைந்தார் இயங்கியல் பொருள்முதல்வாதம் என அவரது தத்துவம் பெயர் பெற்றது மனிதர்களின் உழைப்பு நடவடிக்கை சமூகத்திலும் வரலாற்றிலும் இயங்கும் பொருளாக அவரால் கண்டறியப்பட்டது. உற்பத்தி நடவடிக்கையின்றி எந்த சமூகமும் வாழ்வதில்லை. மனிதர்கள் தங்களை சமூகமாக மறுஉற்பத்தி செய்து கொள்வதில் முனைப்பாக இருந்தனர். மனிதன் தன்னை ஒத்த உழைப்பாளிகளாக ஒன்று சேரும்போது ஒரு வர்க்கமாக சமூகத்தை மாற்றியமைக்கும் வர்க்கப் போராட்டங்களின் ஈடுபடுகிறான். வர்க்கப் போராட்டம் என்பது சமூகச் சூழலை மாற்றி அமைக்கும் ஒரு தீவிர நடவடிக்கை.

## வரலாறு குறித்த மார்க்சிய கொள்கை

மார்க்சியத்தின் தத்துவம் "இயங்கியல் பொருள் முதல் வாதம்" எனப்படுகிறது பொருள்முதல்வாத சிந்தனையை இயங்கியல் பண்பு கொண்டதாக உருமாற்றியதன் விளைவாக ஒட்டுமொத்தத் தத்துவச் சிந்தனையுமே வரலாற்றுத் தளத்தில் வைத்து பார்க்கப்படுகிறது. வரலாற்றைத் தாண்டி எதுவும் இருப்பதாக மார்க்சியம் கருதுவது இல்லை எனவே இயங்கியல் பொருள் முதல்-வாதம் வரலாற்றுப் பொருள் முதல் வாதம் என்றும் அழைக்கப்படுகிறது. "இயக்கம்" என்பதுவும் "வரலாறு" என்பதுவும் ஒரே பொருண்மையை கொண்டவை தான் (Gnani, 2001). சமூகம் வரலாறு குறித்த பொதுவான விதிகளை வரலாற்றின் இயங்கு சக்திகளை, வளர்ச்சிப் போக்குகளை வரலாற்றுப் பொருள் முதல் வாதம் அடையாளப்படுத்துகிறது. இது மார்க்சியத்தின் சமூகவியல் என்றும் அழைக்கப்படலாம்.

## சமூகத்தில் இயங்கும் பொருள்

மனிதர்கள் தமது இனத்தை தம்மைத்தாமே மறுஉற்பத்தி செய்து கொள்கின்றனர். இது இயற்கையான உயிரியல் அடிப்படையாகும். மனிதர்கள் தமது இனத்தை மறுஉற்பத்தி செய்து கொண்டால் மட்டும் போதாது நாம் வாழ்வதற்கான அடிப்படைத் தேவையான சாதனங்களை மறுஉற்பத்தி செய்து கொள்ள வேண்டும். உயிர் வாழ்வதற்கான உணவு, உடை, உறைவிடம், உழைப்புக் கருவிகள், போக்குவரத்து சாதனங்கள், பரிமாற்றம் போன்றவற்றை மறு உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். இச்செயல்பாடுகள் அனைத்தும் தனி மனிதர்களால் உருவாக்கப்படுவதல்ல. மனிதர்களின் கூட்டு செயல்பாடாகும் இதனையே மார்க்சியம் விரிவாக ஆய்வு செய்கிறது. வாழ்க்கை சாதனங்களை உற்பத்தி மறுஉற்பத்தி செய்து கொள்ளுதலை, அதாவது மனித உழைப்பு நடவடிக்கையை சமுதாயத்தில் இயங்கும் பொருள் என்று மார்க்சியம் அடையாளம் காட்டுகிறது.

## அந்நியமாதல்

உழைப்பும் சமூக செயல்பாடும் மனித சாராம்சமாக மார்க்சியம் வரையறுக்கிறது சுரண்டல் சமூக அமைப்புகளில் மனிதன் உழைப்பிற்கும் சமூக செயல்பாட்டிற்கும் உரிய வாய்ப்புகள் நிலவுவது கிடையாது. சுரண்டல் சமூக அமைப்புகளில் மனிதன் தனது சாராம்சத்தை இழந்து வாழ்கிறான். உழைப்பே மனித சாராம்சம் எனும் போது மனிதனுக்கு உழைப்பில் சந்தோஷம் வெளிப்பட வேண்டும். ஆனால் சுரண்டல் சமூக அமைப்புகளில் உழைப்பு கருவிகள் உழைப்பாளியின் உடைமையாக இருப்பதில்லை. நிலம், சுரங்கம், தொழிற்சாலை போன்ற பிற சாதனங்கள் உழைப்பாளியின் சொந்தமாக இருப்பதில்லை. உழைப்பின் விளைவாக உற்பத்தியாகும் பொருள்கள் மீதும் உழைப்பாளிக்கு உரிமை

கிடையாது அவனது உழைப்பின் மீது கூட அவனுக்கு உரிமை கிடையாது. எட்டுமணி வேலை நேரத்தில் அவனது உழைப்பு சக்தி விற்கப்படுகிறது. அதை விலைக்கு வாங்கும் முதலாளி அந்த உழைப்பிற்கும் அந்த உழைப்பாளி உற்பத்தியாகும் பொருள்களுக்கும் உற்பத்திக் கருவிகளுக்கும் சாதனங்களுக்கும் உடைமையாளனாக விளங்குகிறான். "தனது உழைப்பின் மீது தொழிலாளி உரிமை கோரி போராட விளையும்போது போராட்டங்களின் மீது அடக்குமுறையை செலுத்துபவனாகவும் இருக்கிறான். இவ்வாறு சுரண்டல் சமுதாயங்களில் மனிதன் தனது மனித சாராம்சத்தை இழந்தவனாக இருக்கிறான் இதனை மார்க்ஸ் அந்நியமாதல் என்கிறார் (Gnani, 1976).

இவ்வாறு மார்க்சிய தத்துவம் மனிதர்களிடையே ஏற்படும் அன்னியமாதல் சுட்டிக்காட்டுகிறது. இதுவே இந்தியாவில் குறிப்பாக தமிழகச் சூழலில் சமயங்களுக்குள்ளாக ஏற்பட்டுள்ள சாதியப் பிளவுகளால் அடித்தள மக்கள் அந்நியப்பட்டுள்ளனர். ஆளும் வர்க்கத்தினர்களால் அந்நியப்பட்டு வாழ்கின்ற அடித்தள மக்கள் தங்களின் இனத்திற்குள்ளாக ஒற்றுமையை பலப்படுத்த கொள்வதற்காகவும் தமது இனத்தை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் நாட்டுப்புறக் கலைக் கூத்துகளை நிகழ்த்தி தங்களை அடையாளப்படுத்துவதோடு தங்களுக்கான தெய்வங்களை கண்டடைந்தனர். இந்து மதத்திற்குள் நெடுங்காலமாக தொடர்கின்ற சாதிகளால் அடித்தள மக்கள் தங்களது வாழ்வில் பல்வேறு இன்னல்களையும் பின்னடைவையும் சந்திக்கின்றனர் பெருந் தெய்வ கோவில்களில் ஒதுக்கப்பட்ட அடித்தள மக்கள் சிறுதெய்வ வழிபாட்டை தங்களின் இனத்திற்குள்ளாக மேற்கொள்ள தொடங்கினர்.

## இந்து மதம்

இன்று உலகில் உள்ள மதங்களில் மிகவும் தொன்மை வாய்ந்தது இந்து மதம். இந்தியாவில் பெரும் பகுதி மக்கள் பிறந்து வளர்ந்த மதம். நடைமுறையில் உள்ள பிற மதங்களில் இருந்து பெரிதும் வேறுபட்டது.

பண்டைக் காலத்தில் இந்து என்னும் சொல் ஒரு நாட்டை, அதில் குடியிருக்கும் மக்களை குறிப்பதாக இருந்தது. பின்பு 10ம் நூற்றாண்டை ஒட்டி அது மதத்தை குறிப்பதானது. ஆங்கில ஆட்சிக்காலத்தில் இச்சொல் ஒரு மதத்தை மட்டும் குறிக்கும் என பரவலாக புரிந்துகொள்ளப்பட்டது. பழமையான அல்லது மத்தியகால இந்து சமயத்தில் சாதி முறை, நிலச்சுவான்தார் முறை, ஜமீன்-அரச ஆதிக்கம் கோவிலை மையப்படுத்திய கலாச்சாரம் போன்றவற்றை காணலாம். அந்த காலகட்டத்தில் வளர்ந்து வந்த கருத்தியல்களில் பொருள் முதல் வாதம், இயக்கவியல் வாதம், முழுமை வாதம் முதலியன விளக்கப்பட்டுள்ளன.

சைவம், வைணவம், சாக்தேயம் என கடவுள் நம்பிக்கைக் கூற்றுகளில் மூவகை உள்ளன. இவை ஒன்றுடன் ஒன்று முரண்பட்டவை என்பது அனைவரும் அறிந்ததே. மேல்சாதி கோயில் கலாச்சாரத்திற்கு இணையாக கீழ் சாதி என சொல்லப்படுவோரின் ஒரு சிறு சிறு வழிபாட்டு இடங்கள் இருந்தன. இவை மட்டும் தான் ஒரு பொதுமக்கள் கலாச்சாரத்தை உருவாக்கின.

கடவுள் தொடர்பாக மூன்று கருத்தோடைகள் இந்து சமயத்தில் உள்ளன. ஒரு கடவுள் நம்பிக்கை, பல கடவுள் நம்பிக்கை, கடவுள் மறுப்பு. இதில் ஒரு கடவுள் நம்பிக்கையாளர்களுக்கு கடவுள் எங்கும் இருப்பார்- அனைத்தும் அறிந்தவர்.

குறிப்பிட்ட வரையறைகளில் இருந்து மனிதர்களை விடுவித்து, மனித வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேற்பட்ட, ஒரு உலகப் பொதுமைக்குள் அண்டப் பொதுமைக்குள் மனித வாழ்க்கையை இச்சமயங்கள் இந்து மதம் என்பதால் நாம் புரிந்து கொள்வது, முஸ்லிம் கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் முதலான சிறுபான்மையினரைத் தவிர்த்து அனைவரும் இந்துக்களே. இந்த இயல்புகளைக் கொண்டவர்கள் இந்துக்கள் என கூற முடியாது. ஏனெனில் பிற மதங்களைப் போல் கண்டிப்பான விதிகளும் முறைகளும் இந்து மதத்தில் இல்லை. ஆனால் இதெல்லாம் இந்து மதத்தில் உள்ள

பல்வேறு சாதியினருக்கும் அவற்றின் உட்பிரிவுகளுக்கும் உள்ளன. எனவே இந்து மதத்தில் இருந்து வெளியேற்ற முடியாது. ஆனால் சாதியிலிருந்து வெளியேற்றுவார்கள்.

பழைய பிராமண வேதகால மதம் அரசாட்சியின் வலுவான துணையுடன் சாதி-நிலச்சுவான்தார்-நாட்டாமை ஆதிக்கத்தின் ஒரு புது சமூக அமைப்பை கட்டி எழுப்பியது. பொது ஆண்டின் முதல் நூற்றாண்டில் தொடங்கி குப்த அரசர்களின் காலம் வரை இந்த அமைப்பு ஆழமாக வேர் பிடித்திருந்தது.

கோவிலை மையமாகக் கொண்ட ஒரு கலாச்சாரம் அந்த அமைப்பின் தவிர்க்க முடியாத ஒரு கூறாக மாறி இருந்தது. நான்கு நிறங்களுக்கு மாறாக நான்காயிரம் சாதிகள் நடைமுறைக்கு வந்தன. இந்த சாதி அமைப்பு என்பது உயர்வு தாழ்வை அடிப்படையாகக் கொண்டது என்பது அனைவரும் அறிந்ததே.

## வழிபாட்டு மரபின் வழி மேலைநாட்டுத் தத்துவங்களை வகுத்துக் கொள்ளுதல்

இந்தியாவில் சமய வகைகள் பல தோன்றின பலவகையான கலைகள், இலக்கியங்கள், காலங்காலமாகத் தோன்றி வளர்ந்திருக்கின்றன. இந்தியச் சூழலின் தூண்டுதலாலேயே இவை வளர்ந்திருக்கமுடியும்.

இந்தியச் சமயங்களில் பல வகையான தெய்வங்களை நாம் ஏற்கவில்லையானாலும் அத்தெய்வங்களைப் பற்றிய வருணனைகள் நம்மை நிறுத்திச் சிந்திக்க வைக்கின்றன. மனித வாழ்க்கையின் விரிக்கின்றன. மனித வாழ்க்கையிலுள்ள அவலங்கள், குறைகள், கேவலங்கள், போதாமைகள் ஆகியவை தான் மனிதனை இந்த உலகப் பொதுமைக்குள் துரத்துவனவாக இருத்தல் வேண்டும்.

மக்களையும் தெய்வங்களையும் தனித்தனியே பிரித்துப் பார்க்க இயலாத அளவில் இந்திய அல்லது தமிழக சிந்தனை மரபு வேரூன்றியுள்ளது. மக்களின் வாழ்வியல், பண்பாடு, சிந்தனை ஆகியவற்றோடு தொடர்புடைய தெய்வங்களின் சமூகப் பண்பாட்டை முழுமையாக புரிந்து கொள்வது எளிதல்ல. பிறப்பு முதல் இறப்பு வரை தெய்வங்கள் மனிதனோடு கொள்ளும் உறவும் இறந்த பின் மனிதனின் ஆவி மனிதர்களோடும் தெய்வங்களும் கொள்ளும் உறவும் மனித வரலாற்றின் பல்வேறு கட்டங்களை கடந்து வந்துள்ளன. என்பதை புராணங்களும், வழிபாட்டு மரபுகளும் உணர்த்தும்.

சமூகப் பண்பாட்டு மாற்றங்களைப் பின்தொடர்ந்து தெய்வங்கள் தோன்றுதல், மறைதல், மாற்றியமைக்கப்படுதல் போன்றவை காலந்தோறும் நிகழ்ந்தாலும் மனித சமூகம் என்று ஏதோ ஒரு தெய்வத்தை தேவைக்கேற்ப கட்டமைத்துக் கொண்டு நகர்கின்றது என்பதை மறுக்க இயலாது. இதனை தெய்வங்கள் மக்களின் வாழ்வியலில் கொண்டுள்ள தொடர்ச்சியான இயக்கத்தின் மூலமே அறிந்து கொள்ள இயலும்.

அந்த வகையில் இந்தியாவில் தென் தமிழகப் பகுதியில் நாட்டார் தெய்வ வழிபாட்டின் வாயிலாக “கணியான்” என்னும் இனத்தவர்கள் தங்கள் சமூகத்தை அடையாளப்படுத்துகின்றனர். மேலும் அவர்கள் “கணியான் கூத்து” எனும் நிகழ்த்துக் கலையின் மூலமாக தங்களுடைய இன ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றனர். மேலும் வழிபாட்டின் வாயிலாக தங்களது தெய்வத்தை கண்டடைகின்றனர். பொது சமயத்திலிருந்து இவர்கள் அந்நியப்பட்டவர்களாக வாழ்ந்துவருகின்றனர். இருப்பினும் கலைக்கூத்தின் மூலம் தங்கள் இனத்தை அழியவிடாமல் பாதுகாத்து வருகின்றனர்.

## கணியான் ஆட்டம்

கணியான் ஆட்டம் என்பது மரபு வழிப்பட்ட ஒரு நிகழ்த்துக் கலையாகும். நெல்லை தூத்துக்குடி குமரி மாவட்ட நாட்டார் தெய்வ வழிபாட்டுடன் இக்கலை நெருங்கிய தொடர்புடையது. “கணியான்” என்ற சாதியரால் இக்கலை நிகழ்த்தப்படுவதால்” கணியான் ஆட்டம்”, “கணியான் கூத்து”, “கணியான் பாட்டு” ஆகிய பெயர்களில் அழைக்கப்படுகிறது.

பார்ப்பனர் பூசை நிகழ்த்தும் இந்து சமய கோவிலில் நிகழும் திருவிழாவின்றும் கொடைவிழா அடிப்படையில் பல்வேறு வகைகளில் வேறுபடுகிறது. கணியான் ஆட்டம் நிகழ்வதற்குரிய சூழலைக் கொடைவிழா ஏற்படுத்துகின்றது தென்மாவட்டங்களில் கொடை விழாக்களில் தெய்வத்தின் கதையை வில்லுப்பாட்டு வடிவத்திலும் கணியான் கூத்து வடிவத்திலும் நிகழ்த்துகின்றனர்.

## கணியான் கூத்து நிகழ்த்துபவர்

"கணியான்" என்ற சாதியரால் மட்டுமே இக்கலை நிகழ்த்தப்படுகிறது. பிற சாதியினர் இக்கலையை நிகழ்த்துவதில்லை. கணியான் சாதியினர் தங்களைத்" தெய்வக் கணியான்" என்ற அடைமொழியுடன் சொல்லிக் கொள்கின்றனர். தங்களின் பிறப்பு தெய்வப் பிறப்பு என்பது அவர்களின் நம்பிக்கை. கணியான் பிறப்பைப் பற்றிய வில்லுப்பாட்டுக் கதையும், செவிவழிக்கதையும் கணியான் சாதியை கணியான் ஆட்டத்துடனும் சுடலை மாடன் என்ற தெய்வத்துடனும் இணைத்து பேசுகின்றன. சுடலைமாடன் கோவில் விழாக்களில் வழிபாட்டு கூறில் கணியானுக்கு உள்ள இடமும் மேற்குறித்த கருத்தை நிலைநாட்டுகின்றன (Perumal, 1997).

## கணியான் ஆட்டம் நிகழ்த்தும் முறை

கணியான் ஆட்டம் நிகழ்த்தும் குழுவில் பெரும்பாலும் ஆறு கலைஞர்கள் இடம்பெறுவர். தலைமைப் பாடகர் ஒருவரும், பின் பாட்டுக்காரர் ஒருவரும், மகுடாட்டக்காரர் இருவரும், பெண் வேடதாரிகள் இருவரும் ஒரு சேர இணைந்து இக்கலையை நிகழ்த்துவர். சில குழுக்களில் ஜாலரா இசைப்பவர் இடம் பெறுவார். பெரும்பாலான குழுக்களில் பின்பாட்டுகாரரே ஜாலரா இசைப்பார். கணியான் ஆட்டத்தின் தலைமைப் பாடகரை "அண்ணாவி" என்று அழைப்பர். அண்ணாவியே குழுவின் தலைவர். அவரே குழுவினரை வழிநடத்துபவர்.

## கணியான் ஆட்டத்தின் பாடுபொருள்

கணியான் ஆட்டத்தில் பெரும்பாலும் தலைமைத் தெய்வக் கதையைப் பாடுவதே முதன்மை நோக்கமாகும். பிற தெய்வங்களில் கதைகளும் பாடப்படுகின்றன. சுடலைமாடன் (சிவன்) கதை, காளி கதை போன்ற தெய்வங்களை கலைஞர்கள் விரிவாக பாடுகின்றனர். இவற்றைத் தவிர வல்லரக்கன் கதை, பன்றி மாடன் கதை, வண்ணார மாடன் கதை, தளவாய் மாடசாமி கதை, முத்துப்பட்டன் கதை, இசக்கியம்மன் கதை, உச்சினிமாகாளி அம்மன் கதை, முத்தாரம்மன் கதை, சந்தனமாரி அம்மன் கதை ஆகிய சிறு தெய்வக் கதைப்பாடல்களையும் நிகழ்த்துகின்றனர்.

## கணியான் ஆட்டக் கலைஞர்கள் பற்றிய தகவல்கள்

"கணியான்" என்பது ஒரு சாதியை குறிக்கும் சொல். பழங்குடியினர் என்ற பட்டியலில் அவர்கள் இடம் பெறுகின்றனர். மதுரைத் தமிழ் பேரகராதி கணியான் என்ற சொல்லுக்கு" கூத்தாடி" ஒருவகை சாதியான்... (2004: ப- 485) என்று பொருள் தருகின்றது கழகத் தமிழ் அகராதியும் இதே பொருளைத் தான் தருகிறது (1993: ப-270). தமிழ் லெக்சிகன், கணியான் என்பதற்கு" Man of the low caste noted for his skill in magic and his knowledge of astrology; ஒரு சாதியான் (vol - II: 1982: 705) என்று குறிப்பிடுகிறது.

## கணியான் - பிரிவினா்

கணியான் இனத்தினர் கைலாயத்திலிருந்து பூலோகத்திற்கு வந்த போது முதன் முதலில் தென் நாடான மலையாளத்தில் தான் குடியேறினர் என்றும் தற்போது இனத்தினர் 4 பிரிவுகளாக பிரிந்து தமிழகத்தில் வருவதாகவும் கூறுகின்றனர்.

## முதல் பிரிவு

மலையாளத்திலே இருக்கின்றனர். தற்போது கணியான் கூத்தில் ஈடுபடுவதில்லை. மாந்திரிகத் தொழிலிலே ஈடுபட்டு வருகின்றனர். சிலர் செண்டை மேளம் அடிப்பவராகவும் உள்ளனர்.

## இரண்டாம் பிரிவு

சேலம் பகுதியில் உள்ளனர் இவர்கள் இரவில் சுடலை (சுடுகாடு) யிலிருந்து ஊருக்குள் வந்து குறி சொல்லும் கோடாங்கிகளாய் தம் வாழ்வை மேற்கொண்டு உள்ளனர். (குடுகுடுப்பைக்காரர், இராப்பாடி என்றும் அழைக்கப்படுகின்றனர்) இவர்கள் மலையாளத்தில் இருந்து பிரிந்து சென்று சேலத்தில் குடியேறியதாக கூறுகின்றனர்.

## மூன்றாம் பிரிவு

கௌரி பஞ்சாங்கத்தை எழுதும் கணியான் இனத்தினர் தங்களுக்குள் ஒரு மொழியை பேசுகின்றனர். "கௌரி" என்று குறிப்பிடுவது உண்டாம். அதன்படி பஞ்சாங்கம் எழுதுகின்ற கணியான் இனத்தின் ஒரு பிரிவினர் வாழ்கின்றனர்.

## நான்காம் பிரிவு

மகுடத்தை கொண்டு ஒலியெழுப்பி கைவெட்டு, நாக்கு வெட்டு, பேயாட்டம் போன்ற சடங்குகளோடு நாட்டார் தெய்வக் கதைப் பாடல்களையும் பாடி கூத்து நடத்துகின்ற இனத்தினர் கணியான் ஆவார். இவர்கள் தற்போது நெல்லை, குமரி, தூத்துக்குடி பகுதியில் மட்டுமே இக்கலையை மேற்கொண்டு வருகின்றனர் (Mahalakshmi, 2003).

இச் சாதியை சேர்ந்த ஏறக்குறைய ஐந்நூறு குடும்பங்கள் திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்றனர். இருப்பினும் கணியான் ஆட்டம் நிகழ்த்தும் கலைஞர்கள் தற்போது இருநூற்றுக்கும் குறைவாகவே உள்ளனர்.

தமிழகத்தில் அண்மைக் காலத்தில் பரவலாக வெடித்துள்ள சாதி மோதல்கள் அரசியல் பொருளாதாரத்தை பாதித்ததைப் போல நாட்டார் கலைகளையும் பாதித்துள்ளன. கணியான் கூத்து வாழ்க்கையாக கொண்ட இக்கலைஞர்கள் சமுதாயத்தில் அன்னியப்பட்டு வாழ்கின்றனர். தங்களின் வாழ்வாதாரத்திற்கென்று ஒரு இனக்குழுவாக நாட்டார் தெய்வ வழிபாட்டின் மூலமாக "கணியான் கூத்து" கலையை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். பொதுவாக நாட்டார் கலைகளை நிகழ்த்துகின்றவர்களில் பெரும்பான்மையினர் அடித்தள மக்களாகவே உள்ளனர்.

இவ்வாறு ஒரு இனம் ஆங்காங்கே பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் வழிபாட்டினை மையப்படுத்தி நிகழ்த்துக் கலையின் மூலமாக ஒன்றினையும் சமூகச் செயல்பாடு நிகழ்கிறது. பிற சமூகத்தினரால் அந்நியப்பட்டு வாழ்கின்ற இம்மக்கள் தெய்வ வழிபாட்டின் மூலம் தங்களுக்கான சமூக மதிப்பை அடைகின்றனர்.

## முடிவுரை

இந்திய மதங்களில் பல வகைகளில் கூறப்பட்ட தெய்வங்களை நாம் ஏற்பதற்கில்லை. ஆனால் இந்த தெய்வங்களைப் பற்றிய வருணனை நம்மை ஆழமாக சிந்திக்க வைக்கின்றன. மனித வாழ்க்கையில் உள்ள அவலங்கள், குறைகள், போதாமைகள் அவனைக் குறுகிய சிந்தனையில் இருந்து விரிந்த சிந்தனை நோக்கி நகர்த்துகிறது. காலங்காலமாக தோன்றி வளர்ந்த கலை இலக்கியங்கள் இந்திய சிந்தனை மரபில் தூண்டுதல் இல்லாமல் தோன்றி வளர்ந்திருக்க முடியாது தமிழக சூழலில் மக்கள் தங்களது வரலாற்றை கலாச்சாரங்களை மேம்படுத்திக் கொண்டனர் ஐரோப்பிய கோட்பாடுகளை நமது இந்திய சிந்தனை மரபில் மூலமாகத்தான் வகுத்துக் கொள்கிறோம். நவீன கால

பொருள்முதல்வாதத் தத்துவமாக கார்ல்மார்க்ஸ், ஏங்கல்ஸ் வளர்தெடுத்த இயக்கவியல், வரலாற்றுப் பொருள்முதல்வாதம் அமைந்துள்ளது. எனவே இந்திய தத்துவ வரலாற்றின் வளர்ச்சிக் கட்டமாக மார்க்சியத் தத்துவம் உள்ளது. இதுவே இந்திய சமூகம் இயங்கிவரும் சுரண்டல், ஒடுக்குமுறைகளைத் தகர்த்தெறிந்து, சமத்துவ அடிப்படை கொண்ட இந்திய சோசலிசத்திற்கு அழைத்துச் செல்லும்.

## References


Gnani (1976) Indhiya valkaiyum Marksiyamum, Neru Veliyedu, Coimbatore, India

Gnani (2001) Marksiyathirku Alivillai, Pudhupunal Veliyedu, Coimbatore, India

Mahalakshmi, S.M. (2003) Muppathal Isaki Amman Kaniyan Pattu, Ramnath Pathippagam, Then Thirupperai, India

Perumal, A. (1997) Kovil sarntha Nattar Kalaikal, Varun Pathippagam, Nagercoil, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License